தவறான கருத்து. தொடர்ந்து பார்க்கிறபோது, ஆண்டுக்காண்டு நம்முடைய கொள்முதல் அளவு கூடியிருக்கிறது. 2006-ல் நாங்கள் ஆட்சிக்கு வருகிறபோது 13,81,570 டன்கள்தான் என்று சொன்னால், சென்ற ஆண்டு 18,52,784 டன்கள். நான்கு ஆண்டுகளிலே நம்முடைய கொள்முதல் கூடியிருக்கிறது. ஆனாலும், ஈரப்பதத்தைப் பொறுத்த அளவிற்கு நிரந்தரமாக அனுமதி பெறலாம் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். ஆண்டுக்காண்டு அங்குதான் அனுமதி பெறுகிறோம். மாண்புமிகு முதலமைச்சரிடம் கலந்து பேசி இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தத் துறை முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

திருப்பணி

***117022—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவையாறு வட்டம், கடுவெளி கிராமம், அருள்மிகு ஆகாயபுரீஸ்வரர் ஆலய திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கடுவெளி அருள்மிகு ஆகாயபுரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை–3 செயல் அலுவலரால் தக்கார் நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.3,400/–. இத்திருக்கோயில் மூன்றாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டதாகும். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் குடமுழுக்கு

2010 நவம்பர் 9]

நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிகள் உபயதாரர்கள்மூலம் ரூபாய் 8.11 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 75 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய 3 பணிகளுக்கு ரூபாய் 8.30 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இம்மதிப்பீட்டுத் தொகைக்கு அங்கீகாரம் பெற்று அரசு நிதி மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுவெளி கிராமம் என்பது 18 சித்தர்களில் 13–வது சித்தரான கடுவெளி சித்தர் அவர்கள் பிறந்து வளர்ந்த ஊர். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஆலயம் சிதிலமடைந்து இப்போது அந்தத் திருக்கோயிலில் திருப்பணிகள் உபயதாரர்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்கூட கடந்த மானியக் கோரிக்கை பதிலுரையின்போது இந்த ஆலயத்திற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் அறநிலையத் துறைமூலமாக திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், தற்போது எனக்கு இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளது ரூ.4.70 இலட்சம் செலவில் மடப்பள்ளியும், மதில் சுவர் கட்டும் பணியும் நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த ரூபாய் 15 இலட்சத்தை வழங்கி அந்த ஆலய திருப்பணியினை முழுமையாக இந்து சமய அறநிலையத் துறையின்மூலமாக நடத்தித்தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தொகை என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்படி திருப்பணிகள் நடைபெற்று 50 ஆண்டுகளாகி குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களில் இந்த ஆட்சியில்தான் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஏற்கெனவே 9 பணிகள் 8 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று அதில் 75 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. அதையும் சேர்த்துதான் அப்போது மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூபாய் 15 இலட்சம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும். தொகையைப் பற்றிக் கவலையில்லை. முதற்கட்டமாக இப்போது அரசு நிதியிலிருந்து ரூபாய் 4.7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தேவையான நிதியை ஒதுக்கி உரிய பணிகளை விரைந்து நடத்த ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திருப்பணிகள் உபயதாரர்களால் நடைமுறைப்படுத்தப்பெறுகின்றன. அங்கு ரூபாய் 4.7 இலட்சம் செலவில் மதில் சுவர் மற்றும் மடப்பள்ளி கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஆலயத்தில் உள்ள தள வரிசை அமைப்பதற்கு மீதம் உள்ள அந்தத் தொகையை வழங்கி, தள வரிசையையும் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் ஒவ்வொன்றையும் படிப்படியாக செய்து முடிக்க வேண்டிய கட்டம். ஆகவே, இதிலே எத்தனை பணிகளை முடிக்க வேண்டும் என்பதல்ல. முழுமையாக திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதி இல்லாத ஆதி திராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில்

2010 நவம்பர் 9]

இருக்கின்ற ஆலயங்களுக்கெல்லாம் திருப்பணிகள் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கின்ற ஒரு திட்டம். ரூ.25,000/– அளவிலான தொகையைக் கொடுத்து ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற பகுதிகளில் இருக்கின்ற கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆட்சியில்கூட இந்தத் திட்டம் இருந்தது. இப்போது அதை எளிமைப்படுத்தி 5 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்து அவர்களிடத்தில் நேரடியாக இந்தத் தொகையை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் இதுபோன்ற பணிகள் நடப்பதற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. வேண்டிய பட்டியலைக் கொடுத்தால் அந்தத் தொகையினை வழங்குவதற்கு உரிய வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில் உள்ள அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் மிகவும் புகழ்பெற்ற ஒரு திருத்தலம் ஆகும். அந்தத் திருக்கோயிலுக்கு சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் நிலம் உள்ளது. அதேபோன்று ஆயிரம் கிலோ தங்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, பல ஆயிரம் கோடிகள் மதிப்புள்ள அந்தக் கோயில் சொத்துக்களை தனி நபர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள். கடந்த வாரத்தில்கூட அந்தக் கோயில் நிலத்தை விற்பதற்கு கோயிலில் உள்ள சிலர் முயற்சிப்பதாக செய்திகள் வந்துள்ளன. இதுபோன்று அந்தக் கோயிலில் பல கோல்மால்கள் நடக்கின்றன. எனவே, தமிழக அரசு அந்தத் திருப்போரூர் முருகன் கோயிலை ஏற்று நடத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2010 நவம்பர் 9

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு என்பதால், கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று தலைவர் கலைஞர் அவர்கள் திரைப்படத்தில் தீட்டிய அந்த வசனத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கடுமையாக உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களும், நகைகளும் அங்கே இருப்பதை இந்த அரசும், துறையும் ஏற்கெனவே அறியும். தனியார் ஒரு சிலர் அந்த நிலத்தை வாங்குவதற்கு, அந்த நிருவாகப் பொறுப்பிலே இருந்த மடாதிபதிகளிடத்திலே முயற்சிகள் மேற்கொண்டார்கள் என்பதையும் கண்டறிந்து, அது தடுத்து நிறுத்தப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கும் தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் காப்பாற்றுகின்ற வகையில் துறையே அதற்கான அலுவலரை நியமித்து உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

தேர்வு மையம்

***62357—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பாணாவரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை தேர்வு மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?